**அசல் வழக்கு எண். 14/2020**

**01.04.2025**

**பெயர் – சின்னப்பன் (எ) சின்னச்சாமி (Pw2)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(1) துரைசாமி கவுண்டர் என் மீது குத்தகை வழக்கு தாக்கல் செய்தார் என்பதற்கு ஆதரவாக நான் எந்த வித ஆவணங்களும் எனது தரப்பிலும், எனது மனைவி வாதி தரப்பிலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்யவில்லை. எனக்கும், துரைசாமி கவுண்டருக்கும் சுவாதீனத்தை பொறுத்து ஒருவர், ஒருவர் தடையுத்தரவு கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், குத்தகை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நானும், துரைசாமி கவுண்டரும் பூமியின் சுவாதீனம் அவரவர் வசம் உள்ளதாக அதை இடைஞ்சல் செய்யக்கூடாது என்பதைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வா.சா.ஆ.4 ல் கண்டுள்ளது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையொப்பம் இடவில்லை அதில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. பழனிச்சாமி கவுண்டர் கையெழுத்து செய்துள்ளார். பிரதிவாதிகள் பழனிச்சாமி கவுண்டர் கையெழுத்து மறுத்துள்ள நிலையில் மேற்படி கையெழுத்து பழனிச்சாமி கவுண்டருடையது என்பதை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் ரிதான் ஏனென்றால் அவர்கள் தான் அதை நிரூபணம் செய்ய வேண்டும்.

(2) எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 9 ல் நானும், எனது சகோதரி ரேவதி ஆகியோர்கள் 20 வருடங்களுக்கு முன்பே சமரசமாக வாய் மொழியாக பரிவர்த்தனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனை ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் நாங்கள் வாய் மொழியாக பரிவர்த்தனை செய்து கொண்டோம். நான் வழக்கிற்காக பொய்யாக வாய் மொழியாக பரிவர்த்தனை செய்து கொண்டதாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. பு.ஏ.6.09 பூமியில் எனக்கும், ரேவதிக்கும் பாத்தியப்பட்ட 1.52 1 /2 பூமியை ரேவதி எனக்கு வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் விடுதலை பத்திரம் எழுதிக்

கொடுத்தார் என்றால் சரியல்ல அவருக்குண்டான 1.52 1/ 2 ஏக்கர் பூமியை எனக்கு எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் 4 வது பக்கத்தில் க.ச.எண்.497/7 நெ.காலை பு.ஏ.6.09 இதில் பொதுவில் சரிபாதி 3.04 1 /2 இதில் பொதுவில் சரிபாதி 1.52 1/ 4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சகோதரி மற்றும் எனக்கு பொதுவாக பாத்தியப்பட்ட 1.52 யை பொறுத்து தான் எனது சகோதரி விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தவறு. எங்களுக்கு பொதுவில் சரிபாதியான 3.04 1 /2 ஏக்கரில் பொதுவில் சரிபாதி த 1.52 யை பொறுத்து என் சகோதரி எனக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். நான் வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

(3) வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள சொத்தானது வடபுறம், தென்புறம் என்று திசை கண்டு எழுதப்படாமலும், பொதுவில் சரிபாதி என்று எழுதப்பட்டும், பூமி தட வசதி காண்பிக்கப்பட்டு எழுதாமலும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 1977 ம் ஆண்டிலேயே பழனிச்சாமி கவுண்டருக்கு வடபுறமும், வேலுச்சாமி கவுண்டர் தென்புறம் என்று திசை கண்டு எழுதப்பட்டுள்ளது. 1977 ம் ஆண்டிலேயே பூமியானது வடபுறம், தென்புறம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது உண்மையெனில் வா.சா.ஆ.6 ஆவணத்தில் பூமி திசை கண்டு எழுதப்பட்டிருக்கும் ஆனால் பூமி திசை கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பொதுவில் சரிபாதி என்று ஏன் ? குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது தந்தைக்கு இரண்டு மனைவிகள் என்பதால் அதில் மூத்த தாரத்தின் வாரிசுகளான செல்வாம்பாள், கோபாலன் ஆகியோர்களுக்கு இடையே பாகம் பிரிபடாததால் பொதுவில் சரிபாதி என்று எழுதினோம். அதன் பின்னிட்டு பாகம் பிரித்து செல்வாம்பாளிடம் கோபால் அவருடைய பாகத்தை எழுதி வாங்கிக்கொண்டார். நானும், எனது சகோதரி ரேவதியிடம் அவருடைய பாகத்தை எனக்கு எழுதி வாங்கிகொண்டேன்.

(4) அதன் படி செல்வாம்பாள் வகையறாவிற்கு 1 1/2 ஏக்கரும், எனது வகையறாவிற்கு 1 1/2 ஏக்கரும் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி எனக்கு மொத்தமாக பு.ஏ.6.09 ல் எனக்கு 1 1/2 ஏக்கர் மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு நான் எனது மனைவியான வாதிக்கு 18.04.2012 ம் தேதி வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்த 8 வருட இடைப்பட்ட காலத்தில் பூமி என் வசம் சுவாதீனத்தில் இருந்தது பொறுத்தோ, நான்

தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தது சம்மந்தமாக எந்தவிதமான வருவாய் ஆவணங்களும் எனது தரப்பிலும், எனது மனைவியான வாதி தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. உண்மையிலேயே என் சுவாதீனத்தில் 1 1/2 ஏக்கர் இருந்திருந்தால் நான் அதற்குண்டான வருவாய் தை ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தான் நான் வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(5) எனது முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 10-ல் பு.ஏ.3.04 1/2 பூமி எனக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமி ஆகும். மேற்படி பாரா 10 ல் நான் கரும்பு, மக்காச்சோளம், மல்பெரி போன்றவற்றை சாகுபடி செய்தேன் என்பதை காட்டுவதற்குண்டான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். க.ச.497/7 பூமியில் பு.ஏ.6.09 பூமி உட்பிரிவு செய்யப்பட்டது சம்மந்தமாக எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளோம். பு.ஏ.6.09 பூமியில் செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு முன்பு எனக்கு பு.ஏ.1.52 1/2 பூமியும், செல்வாம்பாள் வகையறாவிற்கு 1.52 1/2 பூமியும், பிரதிவாதிகளுக்கு தலா 1.52 ½ பூமி பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பொன்மணி மற்றும் ஜெயந்திக்கு எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

(6) பிரதிவாதிகள் பொன்மணி மற்றும் ஜெயந்தி ஆகியோர்கள் மாண்பமை உடுமலை சார்பு நீதிமன்றத்தில் பு.ஏ.6.09 ல் பிரதிவாதிகளுக்கு தலா 1.50 ஏக்கர் பூமி கூட்டாக பாத்தியம் என்றும், எனது மனைவியான வாதி மற்றும் செல்வாம்பாள் வகையறாவிற்கு 1.50 ஏக்கர் பூமி கூட்டாக பாத்தியப்பட்டது என்றும் அந்த சொத்தில் பாகம் பிரித்துத் தரக் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி சார்பு நீதிமன்ற வழக்கில் பிரதிவாதிகளுக்கு தலா 1.50 ஏக்கர் பூமி பாத்தியம் உள்ளது என்றும், எனக்கு 3.04 1/2 ஏக்கர் பூமி பாத்தியம் என்றும் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். செல்வாம்பாள் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட 1.50 1/2 ஏக்கர் பூமியைப் பொறுத்து நாளது தேதி வரை ஆவணம் எதுவும் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணத்தின் தேதி வருடம் ஞாபகம் இல்லை. மேற்படி

ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுமாராக 2012ம் ஆண்டு எழுதிக் கொடுத்திருப்பார்கள்.

(7) செல்வாம்பாள் வகையறா எழுத்து மூலமாக எந்த வித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், தற்போது வரை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. எங்களது அனுபவத்தில் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் க.ச.497/7 சிட்டாவில் செல்வாம்பாள் வகையறா மற்றும் எனது பெயர் மற்றும் பிரதிவாதிகள் பெயர் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே எனக்கு 2002ம் ஆண்டு செல்வாம்பாள் வகையறா அவரது பாகத்தை எனக்கு எழுதிக் கொடுத்திருந்தால் 2022ம் வருடத்திய ஆவணமான பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் செல்வாம்பாள் பெயர் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு எனது பெயரில் உள்ள சொத்து சம்மந்தமான சிட்டா உள்ளிட்ட ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பு.ஏ.6.09 பூமி தற்போது வரை வாதி, செல்வாம்பாள் வகையறா மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. எங்களது தனிப்பட்ட சுவாதீனத்தில் தான் உள்ளது. பு.ஏ.6.09 பூமியில் பு.ஏ.3.04 1/2 பூமியை எனக்கு பாத்தியம் மற்றும் உரிமையும் இல்லாத அதிகப்படியான சொத்தை வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் எனது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தது தவறு என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 3.04 1/2 பூமியைத்தான் தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன்.

(8) வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 3ல் கண்டுள்ளபடி நானும், எனது சகோதரியும் மேஜரான உடனே எனது சுவாதீனத்தில் வைத்து சர்வசுதந்திரமாக அனுபவித்து வந்த சொத்துக்கள் என்று வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறெனில் சுமாராக 40 வருடங்களுக்கு முன்பு பூமியை எங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் "எனது சகோதரி ரேவதி விடுதலை ஆவணத்தில் எழுதிக் கொடுத்துள்ள முழுச் சொத்துக்கள்" என்ற வாசகம் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 3ல் எனது பெயருக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டு எனது சுவாதீனத்தில் இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டா என்று கண்டுள்ளது நான், செல்வாம்பாள் வகையறா

மற்றும் பிரதிவாதிகள் என்றால் சரிதான். செல்வாம்பாள் வகையறா நாளது தேதி வரை எனக்கு எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்பதால் நான் மேற்படியாளர்களின் பாகத்தை சேர்த்து வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சட்டப்படி அது செல்லும்.

(9) வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 4–ல் பாகப்பத்திரத்தில் கண்ட சொத்துக்களை கூட்டு பாகஸ்தர்களுடன் வாய் மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம் என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாய் மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்ய இயலாது. வா.சா.ஆ.1 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் உள்ள செக்கு பந்திகள் பு.ஏ.6.09 பூமிக்கு உண்டான மூல பத்திரங்கள் எதிலும் செக்கு பந்திகள் இல்லாமல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் செக்கு பந்தியில் உடுமலை – தாராபுரம் ரோட்டிற்கு வடக்கு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பு.ஏ.6.09 பூமிக்கு நுழைவு வாயில் உடுமலை – தாராபுரம் ரோடு என்றால் சரியல்ல வேறு வழி உள்ளது. வேறு வழி பாலசுப்பிரமணியம் பூமியை ஒட்டி மேல்புறம் உள்ளது. வேறு வழி உள்ளது என்பதை நிரூபிப்பதற்கும், தாவா பூமியை ஒட்டி பாலசுப்பிரமணியம் பூமி உள்ளது என்பதை நிரூபணம் செய்ய எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பு.ஏ.6.09 பூமிக்கு உடுமலை–தாராபுரம் ரோடு வழியாக தான் செல்ல வேண்டும் என்றாலும், நான் வேண்டுமென்றே என் மனைவி பெயரில் முன்புறம் உள்ள பூமியை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றாலும், சரியல்ல. வேறு வழி உள்ளது.

(10) இந்த வழக்கில் உடுமலை– தாராபுரம் செல்லும் ரோட்டிலிருந்து சென்றால் மட்டுமே பு.ஏ.6.09 பூமியின் நுழைவு வாயிலை அடைய இயலும் என்பதை நிரூபணம் செய்ய பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்த போது எங்களது தரப்பில் ஆட்சேபணை செய்து அந்த ஆட்சேபணையின் பேரில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் நான் சொன்னபடி வேறு தடம் உள்ளது என்பதை நிரூபணம் செய்ய வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டால் வேறு நுழைவு தடம் இல்லை என்பது தெரிந்து விடும் என்ற காரணத்தினால் தான் நான் ஆட்சேபணை செய்து

அதனடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விவரம் அன்றைய தேதியில் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் அவர்களுக்கு எப்போது தெரியும் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அவர்கள் வழக்கறிஞர் மூலமாக மடத்துக்குளம் வட்டாட்சியர், நில அளவையர், செல்வாம்பாள் வகையறா, எனக்கு, எனது மனைவியான வாதிக்கு பு.ஏ.6.09 பூமி பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தலா 1.50 ஏக்கர் பூமியை பாகம் பிரித்துத் தரக் கோரியும் கடந்த 10.07.2012 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். **அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பி.வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(11) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நானோ, எனது மனைவியான வாதியோ பு.ஏ.6.09 பூமியானது பிரதிவாதிகளின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றோ, எனது தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது என்பதைக் குறித்து பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அவசியம் இல்லை என்பதால் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.13 வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகளை நானோ, எனது மனைவியான வாதியோ மறுக்காத காரணத்தினால் எங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 18.04.2012 ல் தேதி முதல் நாளது தேதி வரை எனது மனைவியான வாதியின் பெயரில் தாவாச் சொத்தைப் பொறுத்து தனிப்பட்ட பட்டாவோ, அடங்கலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சுவாதீனத்தில் உள்ளது என்பதற்காக சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளோம்.

(12) கடந்த 14.07.2012 ம் தேதி பிரதிவாதிகள் அவர்களது வழக்கறிஞர் மூலமாக பு.ஏ.6.09 பூமியில் மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்பது குறித்து பி..வா.சா.ஆ.9 மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். ஆனால் மேற்படி மின் இணைப்பு பழனிச்சாமி கவுண்டர் பெயரில் தான் உள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பிற்கும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பு.ஏ.6.09 பூமி முழுவதும் நாளது தேதி வரை எனது மனைவியான வாதி, செல்வாம்பாள் வகையறா மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது நான் வழக்கிற்காக தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. மேலும் செல்வாம்பாள் வகையறாவிற்கு பாகம் உள்ளது அதை மறைத்து வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தியதால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. தவறு ஆகும். பூமியின் சுவாதீனம் எனது பெயரிலும், எனக்கு பின்னிட்டு எனது மனைவிக்கும் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1977 ம் ஆண்டு முதல் தனிப்பட்ட சுவாதீனத்தில் தான் உள்ளது அதனால் தான் குத்தகைக்கும் விட்டோம். அதில் பழனிச்சாமிக் கவுண்டர் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்.

(13) வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு பாத்தியமும், உரிமையும் இல்லாத அதிகப்படியான சொத்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதால் வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எனது சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்வதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் செய்தேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் செய்தேன் ஆனால் அவர்கள் சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை அணுகுமாறு கூறிவிட்டார்கள். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் சென்ற வாரம் கூட தாவாச் சொத்தில் வேலி முள்ளை பிடுங்கக் கூடாது என்று பிரதிவாதிகளின் கணவர்கள் பாலசுப்பிரமணியம் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் பிரச்சனை செய்து வருவாய் கோட்டாட்சியர் முன்பு விசாரணை நிலுவையில் உள்ளது. மேற்படி சங்கதி குறித்து நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறாமல் வழக்கிற்காக அனுதாபம் பெற வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(14) பு.ஏ.6.09 பூமியில் எனது மனைவி, செல்வாம்பாள் வகையறா மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதால் தடையுத்தரவு கோரி என் மனைவியான வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்க வழக்கு என்றால் சரியல்ல. கூட்டு உரிமையாளர் பங்கிற்கு எதிர்த்து விரோதமாக மற்றொரு கூட்டு உரிமையாளரான எனது மனைவியான இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. செல்வாம்பாள் வகையறா பு.ஏ.6.09 ல் பு.ஏ.1.52 1/2 பூமி

தற்போது வரை பாத்தியப்பட்டுள்ளதால் மேற்படியாளர்களை இந்த தாவாவில் அவசிய கட்சிக்காரராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.04.01 10:59:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்